பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 03 வியாழக்கிழமை 16.05.2024 கதிர் 190

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு அறிக்கை

# தமிழர்களுக்கு நீதி கிட்டாது என்பதற்கு சம்பூர் சம்பவமே மிக பிந்திய உதாரணம்

### சர்வதேசம் இதை உணரவேண்டும் என்றும் வலியுறுத்து

தமிழர்களுக்குஇந்தநாட்டில் நீதி கிட்டப் போவதில்லை என்பதற்கு சம்பூர் சம்பவமே மிக அண்மைய நல்ல முன் உதாரணமாகும் என்று தெரிவித்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு சர்வதேசம் அதனை உணர்ந்து போர்க் குற்றங்களுக்கான நீதியையும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதன் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளநெருக்கடி ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் மேற்கொள்ளப்படுவதாக அஞ்சப்படுகின்றது. ஏனெனில் நீதிமன்றத் தடையை மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினார்கள்என்கிறகுற்றச்சாட்டின் கீழ் சம்பூரில் கைது செய்யப்பட்ட மூன்று பெண்கள் உட்பட நால்வர் மீதும் ஐ.சி.சி.பி.ஆர். என்கிற பன்னாட்டுச் சட்டத்தின் கீழ்தான் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி போரைத் தூண்டுவதோ , வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை ஏற்படுத்துவதோ தவறு. இவற்றைச் செய்யும்ஆளெவரும்இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கானகுற்றவாளியாதல் வேண்டுமென சொல்லப்படுகிறது.

இந்தஉறுப்புரையின்கீழ்உள்ள குற்றச் செயல் பாரதூரமானதும் பிணை வழங்கமுடியாததுமான குற்றமாகும். இத்தகையகுற்றச்சாட்டு புரிந்துள்ளதாக சந்தேகப்படும் அல்லதுகுற்றம்சாட்டப்பட்டுள்ள ☞ 2

## பாலியாற்று நீர் திட்டம் நேற்று தொடக்கிவைப்பு



வடக்கு மாகாண மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொடுக்கும்தொலைநோக்குடன் பாலியாறு நீர்த் திட்டம் நேற்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் வடக்கு ஆளுநர் திருமதி பி.எம.எஸ்.சார்ள்ஸ் ஆகியோரால் தொடக்கி வைக்கப்பட்டது. மன்னார் வெள்ளாங்குளம்பகுதியில்இந்தத் ☞ 2

## இன்று போராட்டம்

பல்கலைக்கழகஊழியர்களின்தொடர்போராட்டத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப்பல்கலைகழக ஊழியர்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில்ஈடுபடவுள்ளனர்என்றுயாழ்ப்பாணப் பல்கலைக்கழகஊழியர் சங்கம் இணைச் செயலாளர் த.சிவரூபன் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக் கழகங்களில் 02.05. 2024 மதியம் முதல் நடைபெற்று வரும் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தின் ஒரு பகுதியாக எமது போராட்டத்தை ஏனையோருக்கு அறியத்தரும் விதமாகவும், ஏனையவர்களின் ☞ 8

## மே 18 தமிழ்த் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்

தமிழர் தாயகத்தில் மே 18 ஆம் திகதியை தமிழ்த் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகக் கொன்று அழிக்கப்பட்டு15ஆண்டுகள் நிறைவுறுகின்றவலிசுமந்த நாட்களைநினைவுகூருகின்ற இந்தத் தருணத்தில் தமிழராகியஎம்ஒட்டுமொத்த ஆன்மாவையும்பாதித்தமே18 ஐதமிழ்த்தேசியதுக்கநாளாக நாம் அனைவரும் கடைப்பிடிப்போம். ☞ 8

## 2 ஆண்டுகளில் 75 புதிய சட்டங்கள்

### ஜனாதிபதி பெருமிதம்

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும்75புதியசட்டங்களைஆளும் தரபபுநிறைவேற்றியுள்ளதாகவும் தெற்காசியாவில்புதியசட்டங்களைச் செயற்படுத்தும்நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கதெரிவித்தார்.

தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

’ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சட்டத் துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுக ளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.சிலபாராளுமன்றங்கள் 04 அல்லது 05 வருடங்கள் செயற்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கம்அதன்பணிகளை செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்க பாராளுமன்றத்திற்கு வர வேண்டும். அதன்படி புதிய சட்டங்களை நிறைவேற்றி புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப் படுத்தநாம்எதிர்பார்த்திருக்கிறோம்.

சட்டத்தின் தாமதம் குறித்தும் அதிககவனம்செலுத்தியுள்ளோம். நீதி நிலையாட்டப்பட வேண்டும். உரிய நேரத்தில் ☞ 8

## ஆட்கடத்தில் ஈடுபடுபவர்களுக்கு தராதரம் பாராமல் தண்டனை

### இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

ஆட்கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராகதராதரம்பாராமல் சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் வலியுறுத்தினார்.

ரஷ்ய உக்ரைன் போருக்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை கூலிப்படையாக பயன்படுத்தி ஆள் கடத்தலில்ஈடுபட்டதாகசந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட மேலும் சிலசந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது ☞ 8

## இலங்கையை இன்று கட்டியெழுப்புவதில் ஆளும் தரப்பு பெரும் பங்காற்றியுள்ளது

### நீதி அமைச்சர் விஜயதாச பெருமிதம்

தற்போதையஆளும் தரப்பு இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில்பெரும் பங்காற்றியது என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்புஅமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

தெல்தெனியபுதியநீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெல்தெனியபிரதேச மக்களுக்கு இன்றைய தினம் வரலாற்று சிறப்புமிக்க நாளாகும். 2015ஆம் ஆண்டு பிரதமராகபதவிவகித்தரணில் விக்ரமசிங்க, இந்தப் பகுதிக்கு புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதியை வழங்க முயற்சித்தார். இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதில் காணிப் பிரச்சினைகாணப்பட்டது. ஆனால், இந்த இடத்தில் இருந்த பழைய கட்டடத்துக்குப் பதிலாக புதிய நீதிமன்ற ☞ 8

## பொதுத் தேர்தல் கோரிக்கைக்கு ரணிலிடமிருந்த பதில் இல்லை

### பெரமுன கட்சி தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லைஎன்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினார் என்று பொது ஜன பெரமுன கூறியுள்ளது.

இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில்பஸில்ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்குஇடையில் இடம்பெற்றுள்ளஏழாவது கலந்துரையாடல் இதுவாகும். ☞ 8

## அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம் ஜனாதிபதி ரணிலின் பணிப்புரையில்

இந்நாட்டில்முஸ்லிம் மக்களுக்காக அளப்பரிய சேவைகளையாற்றிய தலைசிறந்த அரசியல்வாதியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமானமர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும்வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ’அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம்’ ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எம்.எச்.எம்.அஷ்ரபின் 24ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ்மற்றும் முஸ்லிம்சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க எம்.எச்.எம். அஷ்ரபின் பிறந்த ஊரான கல்முனையில் இந்த நினைவு அருங்காட்சியகம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் ☞ 8

## மத்திய வங்கி சம்பள பிரச்சினையை தீர்க்கக்கூடிய தனிக் குழு வேண்டும்

### அதை மக்களே தெரிவு செய்யவேண்டும் என்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

மத்திய வங்கி தன் விருப்பத்தின் பேரில் ஊதியத்தைஅதிகரிக்கும் போது, ஆளும் தரப்பு அதைதன் விருப்பப்படி அங்கீகரிக்கிறது. இது நியாயமற்ற செயல். இதனால் வேலைநிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேலைநிறுத்தங்களால் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதால் இப்பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். சரியான குழுவைத்தெரிவு செய்வதற்கான ☞ 8

# உக்ரைன் போர் களத்தில் 288 இலங்கை படையினர்

## அவர்களில் 16 பேர் உயிரிழப்பு

ரஷ்யாமற்றும்உக்ரைன்போரில் பங்கேற்ற 16 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக இதுவரையில் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு இராணுவ கூலிப்படைக்கு ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் இதுவரை 288 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ரஷ்ய மற்றும் உக்ரைன் இராணுவ கூலிப்படைக்கு ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல்களை தெரிவிப்பதற்கு 011 240 1146 என்ற தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரை 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் புலனாய்வு பிரிவு பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

அதற்கமைய ஒய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உள்ளிட்ட சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முகநூல் ஊடாகவே இந்த ஆட்கடத்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பகிரப்பட்ட பல்வேறு விளம்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாறு உக்ரைனுக்கு அனுப்பப்பட்டு அங்கு இராணுவத்தில் சிக்கியுள்ள சிப்பாயொருவருக்கு வழங்கப்பட்டுள்ள சின்னம், ரஷ்ய மொழில் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் என்பனவும் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு எத்தனை பேர் சென்றுள்ளனர் என்பது குறித்த துள்ளியமான தகவல்கள் எவையும் எமக்குத் தெரியாது. அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்பு சபை கூட்டத்திலும் இது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்தோடு இது தொடர்பில் தகவல் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ரஷ்யா மற்றும் உக்ரைன் போரில் பங்கேற்ற இலங்கையர்கள் 16 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்றார்.

### இனி இது .....

நபர் விசேட சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றத்தினூடாகவேயன்றி வேறு நீதிமன்றங்களூடாக பிணையில் செல்ல முடியாது.

இருந்தாலும் அவர்கள் நால்வரும் விரைவில் பிணையில் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்டவர்கள் ஆளும் தரப்பு மற்றும் பொலிஸாருடன் மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்-து அவர்களை உடனடியாகப் பிணையில் விடுவிப்பதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் மாணவி ஒருவரின் கையில் இருந்த கத்தியால் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் பொலிஸார் ஒருவர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதன் காரணமாக பிணை வழங்குவதில் சிக்கல் நிலை இருந்தது என்றும், எனினும் காயமடைந்த அந்தப் பொலிஸார் அனேகமாக இன்று சிகிச்சைகளை முடித்துக்கொண்டு வெளியேறுவதன் மூலம் பிணை வழங்குவதற்கான தடைகள் முடிவுறுத்தப்படும் என்றும் தெரிகின்றது.

இதற்கிடையில் கிழக்கில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தலுக்கான தடை நடவடிக்கைகளுக்கும் தனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதைப் போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நழுவுகின்றார். இது தொடர்பில் தன்னிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரிடம், நினைவேந்தல்களைத் தடுக்கக் கூடாது என்பதுதான் தனது நிலைப்பாடு என்றவாறு கருத்துத் தெரிவித்துள்ளார். கிழக்கில் பொலிஸார் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் ஜனாதிபதி மனோ கணேசனிடம் தெரிவித்திருக்கிறார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் மூலமாக தேவையான அறிவுறுத்தல்கள் கிழக்கில் உள்ள பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் இனி மேல் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது என்றும் இது தொடர்பில் தன்னுடைன் பேசிய வேறு சிலரிடம் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, இந்தச் சம்பவங்களுக்கும் ஆளும் தரப்பினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கிழக்கில் உள்ள சில பொலிஸ் உயர் அதிகாரிகள்தான் இதற்குக் காரணம் என்கிற வகையிலும் அவரது கருத்து அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடைசியில் அதிகாரிகள் தலையில் பழியைப் போட்டுவிட்டு தாங்கள் பரிசுத்த ஆத்மாக்கள் என்பதைப் போன்று விலகிக்கொள்வது அரசியல்வாதிகளுக்கு ஒன்றும் புதிதில்லையே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

### தமிழர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நீதியையும் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையின் பேரினவாத அரச படைகளினதும் பொலிஸாரினதும் புலனாய்வுத் துறையினரதும் பல்வேறு அடக்குமுறை நெருக்குதல்களுக்கு மத்தியில் போர் வலி சுமந்த மக்களாக போரில் கொல்லப்பட்ட, இறந்த எம் உறவுகளுக்காக கடந்த 14 வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வேதனையோடும் நீதி எதிர்ப்பார்ப்போடும் செய்கின்றோம்.

போர்க்காலத்தில் பட்டினிச்சாவை தவிர்ப்பதற்காக செல்லடியினாலும், குண்டுதாக்குதலிலும், ஆங்காங்கே குருதி வெள்ளத்தில் சதைப் சதைப்பிண்டங்களாக உறவுகள் வீழ்ந்து கிடைக்க கஞ்சிக்கு வரிசையில் நின்றதை மறக்க முடியாதவர்களாக ஒவ்வொரு வருடமும் உப்புக் கஞ்சி பகிர்ந்து நினைவுகளை மீட்கின்றோம்.

அவ்வாறே இவ்வருட நினைவேந்தலில் தொடக்க நாளில் கஞ்சி பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சம்பூரில் மூன்று பெண்களையும் ஆண் ஒருவரையும் கைது செய்து ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் 14 நாட்கள் தடுப்பு காவலில் சம்பூர் பொலிஸார் வைத்துள்ளனர்.

இது போரின் வலி சுமந்து நீதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் அனைத்து தமிழர்களையும் மௌனிக்க செய்து தண்டிக்கும் இனவாத வன்முறையாகும்.

இதனை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதோடு குற்றம் சாட்டப்பட்டவர்களை அனைத்து குற்றச்சாட்டுகளில் விடுவித்து உடனடியாக விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர், சட்டமா அதிபர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடக்க இடம் கொடுக்கக் கூடாது எனவும் கூறுகின்றோம்.

கஞ்சி பகிர்தல் எந்த வகையில் இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும்? என்று கேட்பதோடு; ஒன்று கூடுதல் மற்றும் கஞ்சி பகிர்ந்தல் மூலம் தொற்றுநோய் பரவுமென யாரால்? அறிவித்தல் விடுக்கப்பட்டது எனவும் சம்பூர் பொலிஸாரிடம் கேட்கின்றோம்.

அங்கு பொலிஸார் பெற்றுக் கொண்ட தடை உத்தரவின் அடிப்படை நோக்கம் இனவாதமாகும். இதுவே இனமுறைகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகும். இத்தகைய குற்றத்தை செய்த சம்பூர் பொலிஸார் எந்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவர்.

போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்ட நாட்டில் இனப்படுகொலை துன்பியல் நினைவுகளோடு இனஅழிப்பிற்கு தொடர்ந்தும் முகம் கொடுத்தவர்களாக நினைவேந்தலைச் செய்யும் நாம் நீதிக்கான ஆயுதமாகக் கஞ்சியையும், கஞ்சி சிரட்டையுமே தூக்கி நிற்கின்றோம். இதனை இனவாத நோக்கத்தில் சட்டத்தின் துணைகொண்டு தட்டிப்பறித்து புத்தரின் போதனை மிதித்து அவரின் பிச்சை பாத்திரத்தையே தட்டிப்பறிப்தற்கு சமமாகும் என இவ் வைகாசி மாதத்தில் வலியுறுத்தி கூற விரும்புகின்றோம்.

இவ்வருடம் எதிர்வரும் கிழமையில் பௌத்தர்களின் வெசாக் பண்டிகையை கொண்டாடவிருக்கின்றனர். அப்போது தெற்கில் மட்டுமல்ல வடகிழக்கிலும் பௌத்தர்களும், சிங்கள பௌத்த இராணுவத்தினரும் வீதிகளில் தான சாலைகளை அமைத்து வீதியில் பயணிக்கும் மக்களை நிறுத்தி குளிர்பானங்களையும், உணவுகளையும் பகிர்வர்.

தொற்றுநோய் பரவுமென அப்போதும் சம்பூர் பொலிஸார் இதனை செய்யவிடாது தடுப்பார்களா? யாராவது நீதிமன்ற தடை உத்தரவைப் பெறுவார்களா? இல்லையே. தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் தர்ம சாலைகளையும், பௌத்த பாராயணம் ஒலிபெருக்கி சத்தங்களையும் இனமுரண்பாட்டுக்கு உரிய ஒன்றாகவே நாம் பார்க்கின்றபோதும் அதற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாடவில்லை. இன, மத நல்லிணக்கமென நாமும் அமைதி கொள்ளும்போது எம்மை சீண்டிவிடும் செயற்பாட்டில் எவரும் ஈடுபடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

தமிழர்களுக்கு இந்த நாட்டில் நீதி கிட்டப்போவதில்லை என்பதற்கு சம்பூர் சம்பவமே மிக அண்மைய நல்ல முன் உதாரணமாகும். இதனை சர்வதேசம் உணர்ந்து தமிழர்களுக்குக் கூறும் போர்க் குற்றங்களுக்கான நீதியையும் அரசியல் நீதியையும் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் எனவும் முள்ளிவாய்க்கால் 15 ஆம் நினைவு ஆண்டில் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது.

### பாலியாற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்க நிகழ்வு நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பாலியாறு நீர்த்திட்ட தொடக்கத்தை அறிவிக்கும் நினைவுக் கல்லை வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து பாலியாறு நீர்த்திட்ட அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

பாலியாறு நீர்த்திட்டத்திற்காக இலங்கையின் 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களையும், பூநகரி பிரதேசத்தின் ஒரு பகுதியும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் வசிக்கும் 1 லட்சத்து 27 ஆயிரத்து 746 குடும்பங்களுக்குச் சுத்தமான குடிதண்ணீரை விநியோகிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2 ஆண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் செயற்படுத்தப்படுத்துவதே எம் முன்பிருக்கும் சவாலாகும். வழக்கு விசாரணைகள் திறம்பட நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பெருமளவில் வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்படும்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சொத்துக்களை அழித்தால் அங்கே சட்டமே இருக்காது. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தின் ஆட்சியிலேயே தங்கியிருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும்போது மாத்திரமே நாடு என்ற வகையில் அங்கீகாரம் கிடைக்கும். இல்லாவிட்டால் நாட்டில் அபிவிருத்தி இருக்காது. முதலீடுகளை எதிர்பார்க்கவும் முடியாது. அதனால் புதிய சட்டக் கட்டமைப்பை நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

நாட்டில் தற்போது புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக பல சட்டங்களை கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக மத்திய வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு மின்சார சபையின் நஷ்டமும் ஒரு காரணமாகும். வலுவான மின்சாரசபையை செயற்படுத்த வேண்டும். அதனால் அந்த சபையின் மீது அரசாங்கம் கொண்டிருக்கும் உரிமைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

மூன்று சட்ட மூலங்களை அரசாங்கம் அமைச்சரவையில் சமர்பித்துள்ளது. திங்கட்கிழமை அமைச்சரவையில் அதற்கான அங்கீகாரம் பெறப்படும். அதன் கீழ் கடன் முகாமைத்துவத்தையும் நாம் முன்னெடுத்திருக்கிறோம். இதுவரை தேசிய கடன் கட்டுப்பாடு இருக்கவில்லை. கடனைக் குறைக்க நாம் கடனைக் மட்டுப்படுத்த வேண்டும்.

2035 - -2040 ஆண்டுக்குள் கடன் கட்டுப்பாடு 75% வரையில் கொண்டு வரப்பட வேண்டியது அவசியம். அதற்காக நாட்டின் கடன் முகாமைத்துவச் சட்டத்திற்கு அமையாக அரசாங்கம் செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் நிதிக் கட்டுப்பாடு ஒழுங்கின் படி முன்னெடுக்கப்படுகிறது. இந்த ஒழுங்கு முறைகளை மீறவும் முடியும். சுற்றறிக்களை திருத்தும் இயலுமையும் உள்ளது. இதுபோன்ற நிதிக் கட்டுப்பாடு நாட்டில் இதற்கு முன்னதாக இருக்கவில்லை.

இன்று ஆளும் தரப்புக்குச் சொந்தமான சொத்து பற்றி எவருக்கும் தெரியாது. பொது நிதி நிர்வாகத்திற்கான சட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நியூசிலாந்து முதலில் இந்த முறையை ஆரம்பித்தது. அதன்பிறகு இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவைப் போல் இந்தியாவும் அதை அமுல்படுத்தியுள்ளது. இலங்கை அதன் புதியவடிவத்தை சமர்பித்திருக்கிறது.

இறக்குமதி பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும். அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம். அதிலிருந்து நாம் வெளியேற முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறியதாக முன்னர் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இப்போது அது சட்டப்படி செயல்படுத்தப்படுவதால் ஒப்பந்தங்களை மீற முடியாது.

இதை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நாம் எதிர்பார்க்கும் ஆதரவு கிடைக்காது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஜூன் மாத அமர்வுகளுக்கு பின்னர் இந்த சட்டங்கள் கொண்டு வரப்படும்.

சர்வதேச நாணய நிதியத்துடனும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும் உடன்படிக்கைக்கு வந்ததன் பின்னர் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். மேலும், இது தொடர்பாக தனியார் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தையும் வெற்றிகரமாக நடந்து வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததாக சிலர் கூறுகின்றனர். மேலும் சிலர் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்று கூறுகின்றனர். இதுபோன்ற அறிக்கைகள் வெளியிடப்பட்டால், அடுத்த நாள் பங்குச் சந்தை வீழ்ச்சியடைகிறது. பிறகு அவர்கள் பங்குகளை வாங்குகிறார்கள். அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்ததும், மீண்டும் நிலைமை வழமைக்கு வருகிறது. இது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

நமது நாட்டில் ஊழல் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. சர்வதேச நாணய நிதியமும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளும் எம்முடன் இது தொடர்பில் கலந்துரையாடின.

அதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்வைத்தோம். அதில் திருத்தங்கள் சேர்க்கப்பட்டு, இணக்கப்பாடு எட்டப்பட்டதையடுத்து, தற்போது புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அதற்காக 04 முக்கிய சட்டங்கள் உள்ளன. அதில் முதலாவதாக 21 ஆவது திருத்தத்தை முன்வைத்தோம்.

அதன்படி, இது தொடர்பான ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஊழல் தடுப்புச் சட்டம் 2023 இல் கொண்டுவரப்பட்டு, 2024 இல் திருத்தம் செய்யப்பட்டது.

அடுத்தது அரச நிர்வாக விசாரணை அறிக்கை. அந்த பொறிமுறையைத் தயாரிக்கும் நிபுணத்துவம் எமக்கு இருக்கவில்லை. எனினும், சர்வதேச நாணய நிதிடம் அந்த வளம் இருந்தது. இது குறித்த அறிக்கையைத் தயாரித்துத் தருமாறு கோரினோம். அதனை மீண்டும் ஆராய்ந்து, திருத்தங்களைச் செய்து, அரச நிர்வாக விசாரணை அறிக்கையை அரசாங்கம் தயாரித்துள்ளது.

முறைகேடாக பெறப்பட்ட சொத்துக்கான சட்ட மூலம் தயாரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறன. அதன்படி, தெற்காசியாவின் புதிய சட்டங்கள் இப்போது இலங்கையில் உள்ளன. இதன் ஊடாக அரசியலில் மாற்றம் ஏற்படும். இதுவரை ஊழல் எதிர்ப்பு என்பது அரசியல் முழக்கமாக மாறியிருந்தது. ஆட்சிக்கு வந்து இரண்டு மாதத்தில் திருடர்களைப் பிடிப்போம் என்று கூறினாலும் அது நடக்காது. மேலும் அரசாங்கம் திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் திருடர்களை பாதுகாக்க வந்ததாக இந்த அரசாங்கம் மீது குற்றஞ்சுமத்தினாலும், திருடர்களைப் பிடிக்க இந்த அரசாங்கமே சட்டம் கொண்டு வந்துள்ளது.

இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனுபவம் இருக்க வேண்டும். அந்த அனுபவத்தைப் பெற பயிற்சிகள் பெற வேண்டும். நீதி அமைச்சு அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இப்பணிக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளன.

அதன்படி, இந்த அரசாங்கம், கடந்த இரண்டு வருடங்களில் 03 முக்கிய விடயங்களை நிறைவேற்றியுள்ளது. நீதி நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி பலப்படுத்தப்பட்டுள்ளது. மறுபுறம், ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மேலும், ஊழல் தடுப்புச் சட்டங்களும் நிறைவேற்றப்படுகின்றன. இந்த பணிகளுக்கு அனைவரின் ஆதரவும் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.' என்றார்.

# மக்களை தனித்தனியாக சந்திக்க திராணியற்றவர்களே பொது வேட்பாளர் தொடர்பில் அங்கலாய்க்கின்றார்கள்

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ரங்கேஸ்வரன் தெரிவிப்பு

ஜனநாயகத்தில் மக்களை தனித்தனியாக சந்திக்க திராணியற்றவர்களே பொது வேட்பாளர் தொடர்பில் அங்கலாய்க்கின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ஊடகஅமையத்தில்நடைபெற்றஊடகசந்திப்பின்போது ஊடகவியலாளர்களால் பொது வேட்பாளர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை போட்டியிடுமாறு தான் கோரினேன் என்று அவர் கூறியிருப்பது அப்பட்டமான பொய் என ஈ.பி.ஆர் எல் எவ் இன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது தொடர்பில் அவசரப்பட வேண்டாம் எனவும் எவ்வாறாயினும் தென்னிலங்கையை சார்ந்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவரே ஜனாதிபதியாக வருவார். ஆயினும்ஜனாதிபதிவேட்பாளர்கள்தமதுகருத்துக்கள் நிலைப்பாடுகள் என தமது விஞ்ஞாபனங்களை வெளியிட்ட பின்னரே இது தொடர்பில் சிந்திக்கலாம் என கூறியுள்ளார்.

இவ்வாறான சூழலில் பொது வேட்பாளர் தொடர்பில் ஒரு நிலையான முடிவை அக்கட்சி முன்னெடுக்கவில்லை என்பது புலனாகின்றது

இச்சந்தர்ப்பத்தில்தான் சுரேஸ் பிரேமச்சந்திரன் தன்னிடம் ஒருதடவை கேட்டிருந்தார் தமிழ் பொது வேட்பாளருக்கு பொருத்தமானவர் நீங்கள்தான் என்றும் ஒரு சிலரால் இது குறித்து பகிரப்பட்டது எனவும் அது குறித்து எனது நிலைப்பாடு என்ன என்றும் சுரேஸ் என்னிடம் கேட்டிருந்தார். நான் அப்போதே எனது நிலைப்பாட்டை கூறியிருந்தேன் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

முன்பதாக சரத் பொன்சேகா, மைத்திரி, சஜித் என எவ்வித நிலைப்பாடும் இல்லாது தத்தமது சுயநலன்களுக்காக ஆதரவளித்தவர்கள் எல்லாம் இப்பொழுது சஜித் பிரேமதாஸவின் தூண்டுதலிலே இவ்வாறு பொது வேட்பாளர் தொடர்பில் பேசப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதில் பார்க்கவேண்டிய விடயம் என்னவெனில்மக்களைஜனநாயகத்தில் தனித்தனியேசந்திக்கதிராணியற்றவர்கள் இவ்வாறான சந்தர்ப்பவாத கூட்டுக்களை உருவாக்குவதும் தென்னிலங்கை அரசியல் சில தலைமைகளுக்காக வாக்குகளை சிதறடிக்கும் நோக்குடன் செயற்படுவதும் தரகு வேலைகளில் ஈடுபடுவதும் வாடிக்கையாகவே உள்ளது.




உண்மையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது அரசியல் நிலைப்பாட்டினை மக்களிடையே வெளிப்படையாக முன்வைத்தே பயணிக்கின்றது. தேர்தலையும் தனியாகவே நின்று எதிர்கொள்கின்றது.

ஆனால் சந்தர்ப்பவாத சரணாகதி கூட்டில் இருப்பவர்களால் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் மக்களை தனித்தனியே சந்தித்து தமது செல்வாக்குகளை நிரூபிக்க கட்டுவார்களா என்றும் சவால் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# காரைதீவில் ஜெயசிறில் தலைமையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்






(ஜனா)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை அனுஸ்டிக்கும் பொருட்டு முள்ளி வாய்க்கால்நினைவுக்கஞ்சிவழங்கும்செயற்பாடு காரைதீவில் நேற்று காலை இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் தலைமையில் குறித்த கஞ்சி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு காரைதீவு சந்தை கட்டட தொகுதிக்கு முன்னால் இடம்பெற்றது.

இதன்போது சக்தி மீன்பிடி சந்தைப்படுத்தல் கூட்டுறவு சங்கத் தலைவர் கோபால், சிவில் செயற்பாட்டாளர்களான விநாயகம் விமல நாதன், கணபதிப்பிள்ளை கரிசன் ,ஆலய தர்மகர்தாக்கள் , பொது அமைப்புகளின் பிரகிநிகிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வடக்கு, கிழக்கு மற்றும் சர்வதேச நாடுகளில்உணர்வுபூர்வமாகஅனுஸ்டிக்கப்பட்டு வருகின்றநிலையில் இதனைத் தமிழின அழிப்பு வாரம் என பிரகடணப்படுத்தி வடக்கு, கிழக்கில் சிவில் அமைப்புகள் இந்நினைவேந்தலை அனுஸ்டித்து வருகின்றது .

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் நடைபெற விருந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்விற்கு முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் உள்ளிட்ட 5 பேருக்கு நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (05)







# சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் முல்லைத்தீவை வந்தடைவு



(வி.ரி.சகாதேவராஜா)

சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி குழுவினர் நான்கு நாள்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.



அங்குஅவர்களுக்குஅமோகவரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்துஆரம்பமானதுதெரிந்ததே.

நேற்று (புதன்கிழமை) ஐந்தாவது நாள் குழுவினர் இயக்கச்சி ஆனையிறவு ஊடாக பரந்தன் பகுதியை வந்தடைந்தனர்.

இரவு நெத்தலிஆறு பகுதியில் தங்குவார்கள்.

இன்று (வியாழக்கிழமை) வள்ளிபுனம் பிரதேசத்திற்குள்பிரவேசிப்பார்கள். மழையும் வெயிலும் கலந்த காலநிலையில் சுமார் 110 அடியார்கள் இப் பாதயாத்திரையில் பங்கேற்று வருகின்றனர்.(05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## ஆயுத உற்பத்தி வேண்டாம்

இலங்கை 30 வருடங்களுக்கும் மேலான தொடர் போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு. அதற்கு மேலும் இரு கிளர்ச்சிகளையும் பார்த்த நாடு. இவையெல்லாம் ஆயுதங்களை நம்பி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் வன்முறைகள். இந்தப் போர் மற்றும் கிளர்ச்சிகளால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள், பல கோடிக்கணக்கான சொத்துக்கள் என்பவற்றை இலங்கை கடந்த காலங்களில் இழந்துள்ளது. போரின் வடுக்கள், பாதிப்புக்கள் இன்னும் முற்றிலுமாக நீங்கவில்லை. போரின்போது வடக்கு கிழக்கில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் 15 ஆண்டுகள் கடந்தும் இன்னும் –முற்றாக அகற்றி முடிக்கப்படவில்லை. போரால் விதைவைகளான பல ஆயிரம் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க வழியில்லை. அங்கங்களை இழந்தவர்களின் தவிப்பு சொல்லும் தரமன்று.

இப்படிப் போரின் பாதகத்தையும் பாதிப்பையும் அதிகளவில் உணர்ந்த, அதன் பாதிப்புக்களில் இருந்து விடுபடாத ஒரு நாடு வருங்காலத்தில் ஆயுத உற்பத்தியில் ஈடுபட முயற்சிப்பது என்பது ஒரு மிக மோசமான திட்டமிடல். சிறியஆயுதங்களை உற்பத்திசெய்யும் ஆயுத தொழிற்சாலையை அமைப்பது குறித்து இந்தியாவுடன் இலங்கை பேச்சு நடத்தப்படுவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தரைபடை மற்றும் இந்தியாவின் பாதுகாப்புதொழில்துறைஆகியவற்றின்கூட்டுமுயற்சியில் இந்த ஆயுதத் தொழிற்சாலைகளை உருவாக்குவது தொடர்பிலேயேபேச்சுநடத்தப்படுகின்றது. ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் இலங்கை இராணுவத்திற்கு நிபுணத்துவம் உள்ளதாகக் கூறுகின்ற இராஜாங்க அமைச்சர் இலங்கை உற்பத்தி தொழில்துறை குறித்து கவனம் செலுத்தவேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

’’நாங்கள் ஏற்கனவே ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றோம் ஆனால் சிறிய அளவில். ஆயுத உற்பத்தி தொடர்பில்நாங்கள்இந்தியாவுடன்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். கடந்த இரண்டு தசாப்தகாலத்தில் இந்தியாவின் ஆயுத உற்பத்தி துறை பல மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது” எனவும் இராஜாங்கஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இதுவரை ஆயுதங்களைச் சிறிய அளவில் உற்பத்தி செய்தது என்றால், அது தனது தேவைகளுக்கானது மட்டுமே. இப்போது ஆயுதத் தொழிற்சாலைகளை உருவாக்குவது ஏற்றுமதி நோக்கத்தைக் கொண்டதாக இருக்கின்றது. அதாவது மேற்குலக நாடுகளைப் போன்று மற்றைய நாடுகளில் போர்களை ஊக்குவித்து அங்கு ஆயுதங்களை விற்பனை செய்து அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் திட்டம்இது. அடுத்தவர்களின் உயிர்களைக் கொன்று நாம் வாழ முயற்சிக்கும் திட்டம்.

இந்தப்பாவச்செயல்களைஏற்கனவேமேற்குநாடுகள் கனகச்சிதமாகச்செய்துவரும்நிலையில்இலங்கையும், அதுவும் போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு நாடும் அந்தத் திசையிலேயே பயணிக்க விருப்புவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆளும் தரப்பு இந்தத் திட்டத்தை அடியோடு கைவிடவேண்டும். இன்னொரு போர் இலங்கையில் மட்டுமல்ல எந்தவொரு நாட்டிலும் ஏற்படக்கூடாது. யாரையும் கொல்வதற்கான கருவிகளை உருவாக்கி அவற்றை விற்பதன் மூலம் எம்மை வளப்படுத்திக்கொள்ளும் திட்டம் இலங்கையின் பௌத்த தர்மத்துக்கும் ஒருபோதும் அடுக்காது. எனவே இந்தத்திட்டத்தைக்கருவிலேயேகலைத்துவிடவேண்டும். உலக நாடுகளையும் உயிர்களையும் நாசம் செய்யும் இதுபோன்ற திட்டங்களின் மூலம் இலங்கையின் பொருளாதார நலன்களை வளர்ப்பதைவிட, விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதிலும் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் இலங்கை அதிகம் கவனம் செலுத்தவேண்டும்.

# புலம்பெயர் தமிழர்களின் பொம்மைகளா தாயகத் தமிழ் அரசியல் தலைவர்கள்?

**என். விஜேன்**




மலிந்தால் சந்தைக்கு வரும் என்பது போல் தமிழ் அரசு கட்சியில் நடக்கும் கூத்துக்களின் பின்புலத்தில் யார் இருக்கிறார்கள் என்று தற்போது வெளிப்படையாகி வருகிறது. இதுவரை ஒரு தரப்பினர் தங்களை நீதிமான்களாகவும் மற்றத் தரப்பினரை குழப்பவாதிகள் ஆகவும் காட்ட ஆடிய நாடகங்கள் வெளிச்சத்திற்கு வந்து கொண்டு இருக்கிறது. சிறீதரன் உட்பட அவர் தரப்பினர் தங்களை பரிசுத்தவான்களாக சித்தரித்து ஊடகங்கள் மூலமாக ஆடிய காட்சிகள், சுமந்திரனின் தனியார் தொலைக்காட்சி பேட்டியில் அம்பலமாகி விட்டது. என்ன, இந்த விடயங்களை தலைமை தேர்தலுக்கு முன்னரே சுமந்திரன் வெளியிட்டிருக்கவேண்டும். அப்போதுதான் சிலரின் உண்மையான சொரூபங்கள் வெளிக்கொண்டுவர பட்டு வாக்களிப்பு மனச்சாட்சியுடன் இடம்பெற்று இருக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

போர் முடிவின் பின்னரே புலம்பெயர் இயக்கங்களை சார்ந்த சில வர்த்தகர்கள் ஈழத்தமிழ் மக்களை வைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தது எல்லோரும் அறிந்ததே. அதுவும் புலிகளின் பெயரால் வசூல் செய்யப்பட்ட பணம் புகுந்து விளையாடுகிறது என்று ஒரு குற்றச்சாட்டும் உண்டு. புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் தடுமாற்ற நிலைப்பாடு காரணமாக இந்தக் கூட்டம் உட்புகுந்தது. அதுவரை புலிகளின் சொல்லுக்கு கட்டுப்பட்டு தலையாட்டி பொம்மைகளாக இருந்த தமிழ் அரசுக் கட்சியை இந்த புலம்பெயர் கூட்டத்தை சேர்ந்தவர்கள் சிலர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர மெதுவாகக் காய் நகர்த்தினார்கள்.

2009இன்பின்னரானசகலஆளும்தரப்புகளும் தமிழ்தலைமைகளுக்குகயிறுதான்கொடுத்தார்கள். தமிழ் தலைமைகள் ஏமாளிகளாக இருந்த நிலை இந்த புலம்பெயர் குழப்பவாதிகளுக்குச் சாதகமாக அமைந்தது.

சம்பந்தன் + மாவை தலைமையைப் பற்றி ஏராளமான விமர்சனங்கள் இருந்ததை இவர்கள் தமக்குச் சாதகமாகிக்கொண்டனர். மனதை உறுத்திய விடயம் என்னவென்றால் ஆயுதப் போரட்ட முடிவின் பின்னர் தமிழ் இனத்தின் தலைமைப் பொறுப்பு இவர்கள் வசம் வந்தது. இது ஒரு விபத்து தான் ஏனெனில் ஏனைய உறுதி மிக்க தலைவர்கள் பலர் புலிகளாலும் மற்றும் சில ஆயுதக்குழுக்களாலும் கொல்லப்பட்டு விட்டார்கள். எவ்வாறாயினும் இந்த தலைமை பொறுப்பை மதிநுட்பத்துடன் கையாள அவர்கள் இருவரும் தவறிவிட்டார்கள். தட்டிக்கேட்க ஆளில்லை என்று என்று நினைத்தார்கள் போலும். இல்லையெனில் கட்சியின் யாப்பினை புறந்தள்ளி உட்கட்சித் தேர்தலை 10 வருடங்களாக இழுத்தடித்திருப்பார்களா என்ன?

மற்றவர்களைவிடுவோம், இரண்டாம்தலைமை என்று தற்போது குஸ்தி போடும் சிறீதரனும் சுமந்திரனும்கூட ஏன் வாளாவிருந்தார்கள்? கட்சியின் யாப்பினை பின்பற்றியே ஆகவேண்டும் என ஏன் ஒருவரும் வலியுறுத்தவில்லை? இதுவே இவர்களின்தலைமைத்துவப்பண்புகளுக்குசான்று பகர்கின்றது. மறுபக்கத்தில் தலைமைக்கான தேர்தலைகுறிவைத்துதமிழ்அரசுக்கட்சியைமுற்று முழுதாக கைப்பற்ற புலம்பெயர் கூட்டம் திட்டம் தீட்டியது. தமிழ்தேசியம்என்றகோஷத்தைகையில் எடுத்த சிறிதரன் கோஷ்டியை நன்கு கவனித்தனர் இந்த மேற்குலக தமிழ் தேசியவாதிகள் என்று கூறப்படுகிறது. காரணம் ஒன்றும் தமிழ்ப்பற்றோ அல்லது ஈழத்தமிழ் மக்களின் நல்வாழ்வோ அல்லது உரிமைகளை பெறுவதற்காகவோ அல்ல. மாறாக தமிழ் தேசிய கோஷத்தை வைத்து தமிழ் அரசுப் பிரதிநிதிகளினதும் மக்களினதும் உணர்வலைகளை தூண்டி சுமந்திரன் கூட்டத்தை முற்றாக ஓரங்கட்டி அதன் மூலம் தமிழ் அரசுக் கட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே இவர்களின் நோக்கம்.

அதனால் சுமந்திரன் வெற்றிபெற்றால் தமிழ் தேசியம் அழிந்து விடும் என்ற விஷமப் பிரச்சாரம் முன்னெடுக்கபட்டது. உரிமைகளை வென்றெடுப்பது மற்றும் வடக்கு கிழக்கின் அபிவிருத்தி, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள், உள்ளூரிலும் இந்தியாவிலும் ஏதிலிகளாக உள்ள நம் மக்களை மீள் குடியேற்றம் செய்வது போன்ற முக்கியமான விடயங்கள் கிடப்பில் போடப்பட்டன. அகதிகளாக இடம்பெயர்ந்த



மக்களின் காணிகளை முஸ்லிம் அரசியல்வாதி அபகரித்து பள்ளிவாசல் அமைக்க முனைவதாக தகவல்கள் வந்துள்ளன. திருகோணமலையில் இந்து கோவில்கள் அபகரிக்கபட்டு விகாரைகளாக மாறி வருகின்றன. வடக்கில் பெருஞ் செலவில் பிரமாண்ட ஆலயங்களை அமைத்து என்ன பயன், எல்லைப்பகுதியில் சூறையாடல் நடக்கும்போது? இதைப்பற்றி இந்தபுலம்பெயர்கூட்டமோ அவர்களின் கைப்பொம்மைகளோ கவலைப்பட்டதாகக்கூடத் தெரியவில்லை. அவையெதுவும் கட்சித் தலைவர் போட்டியில் பேசுபொருளாகவே இருக்கவில்லை.

இறுதியில் எதிர்பார்த்தவாறு புலம்பெயர் பணத்தில் குளித்தவர்கள் சுமந்திரன் தரப்பைத் தோற்கடித்தார்கள். நடந்த குளறுபடிகளைப் பார்க்கும்போது இவர்களது தமிழ் தேசியப் பற்று எந்தளவில் உள்ளது என்று தெளிவாகப் புரிகிறது. தேசியம் என்பதின் வரைவிலக்கணமே அவரவர் தம் இனத்தின் பால் கொண்ட பற்றும் அர்ப்பணிப்பும் ஆகும். அனைவருக்கும் தேசிய உணர்வும் அவரவர் மொழியில் பற்றும் நிச்சயமாக இருக்க வேண்டும். ஆனால் தேசியத்தின் பெயரால் நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை முன்வைப்பதும் இந்த இக்கட்டான நிலையில் நியாயமான தீர்வொன்று கிட்ட விடாமல் வேண்டுமென்றே இழுத்தடிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்தப் புலம்பெயர் கூட்டத்தினரில் எத்தனை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# புலம்பெயர் தமிழர்களின் பொம்மைகளா....



பேர் வடக்கு கிழக்கில் மீள் குடியேற முன்வருவார்கள் அல்லது அவர்களின் பிள்ளைகளையாவது இங்கு வந்து வாழச்செய்வார்களா? முடியாது. நடக்கவேநடக்காது. ஆனால் இவர்களோ உணர்வுகளைச் சுண்டி விடுவதன் மூலம் புலம்பெயர் நாடுகளில் வசூல் வேட்டை செய்கிறார்கள். இங்கு வாழ்வாதரம் இன்றி தவிக்கும் ஏழைக் குடும்பங்களுக்கோ, அன்றேல் நொந்து போயிருக்கும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பெண் தலைமையிலான குடும்பங்களுக்கோ அல்லது ஒரு காலத்தில் தூக்கிக் கொண்டாடப்பட்டு தற்போது சமூகத்தில் இழி நிலைக்கு தள்ளப்பட்டு நாதியற்றுக் கிடக்கும் முன்னாள் போராளிகளுக்கோ இவர்கள் உதவவில்லை. அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த இந்தப் புலம்பெயர் கூட்டம் உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது புலம்பெயர்ந்தவர்கள் எல்லோரையும் குறிக்காது. சத்தம் சந்தடியின்றி ஒரு சில நல் உள்ளங்களே இத்தகைய நல்ல செயல்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அவர்கள் தாயகத் தமிழர்களைத் தூண்டிவிட்டு அவர்களி துன்பத்தில் குளிர்காயவில்லை. தம்மால் முடிந்தவரையில் உதவுகிறார்கள். அல்லது இங்கு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்கள்.

ஈழத்தில் தொடர் குழப்பநிலைமையை உருவாக்க, ஒரு சில அரசியல்வாதிகளுக்கும் கட்சிகளுக்கும் காசை வீசி எறிந்து எதிர்ப்புப் போராட்டங்களையும் ஊர்வலங்கள் போன்றவற்றை-யும்அரங்கேற்றிஇங்குஒருகொதிநிலையை தொடர்ந்து வைத்திருப்பதும், தாயக மக்களின் சார்பாக தாங்கள் எடுப்பதுதான் முடிவாக இ-ருக்கவேண்டும் என்பதும்தான் இவர்களின் ஒரே குறிக்கோள். விலை போய்விட்ட தேசியவாதிகள் இவர்களின் நிகழ்ச்சி நிரலை தப்பாது செய்து முடிப்பார்கள். இதற்கு முட்டுக்கட்டை என்று நினைக்கும் சுமந்திரனையும் அவர் சார்ந்தவர்களையும் கட்சியில் இருந்து ஓரங்கட்டும் நடவடிக்கைகளை இவர்கள் ஆரம்பித்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது.

கொடுமை என்னவென்றால், இவர்களைப் பின்பற்றி வடக்கில் மக்களால் நிராகரிக்கபட்ட இன்னொரு தோற்கடிக்கப்பட்ட வெற்றுக் கூட்டம் தேசியவாத பரப்புரைய சமீபத்தில் ஆரம்பித்து உள்ளது. என்ன, பொதுத்தேர்தலில் ஒரு பா.உ. பதவியையாவது தேசியவாத கோசம் பெற்றுத்தரும் என்ற நப்பாசைதான் அவர்களுக்கு. தமிழ் அரசில் எழுந்த தலைமைப் போட்டி உள்ளிருந்தே கொல்லும் வியாதி போல் தோன்றினாலும் அதற்கான வைரஸ் புலம்பெயர் கூட்டங்களில் இருந்துதான் வந்தது என்பது தெளிவு.

சுமந்திரனின் பேட்டியும் அதையொட்டிய வெளியான ஆதங்க கட்டுரைகளும் பத்திரிகைகள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வந்த பின்னர் வேசம் கலைந்துவிட்ட தவிப்பில் ஒரு புலம்பெயர் புண்ணியவான் உள்ளூர் பத்திரிகை ஒன்றில், போராட்டத்திற்கு முன்னும் பின்னும் தங்கள் பங்களிப்பை பற்றி சகட்டு மேனிக்கு வரிந்து கட்டிக் கொண்டு எழுதி இருந்தார். இதற்கு தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர் குசால் பெரேரா பைனான்ஷல் டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரையை மேற்கோள் காட்டியும் உள்ளார். குசால் பெரேரா, தமிழ் தலைமைகள் போரின் பின்னரான காலத்தில் தங்களது மக்களுடன் நிற்கத் தவறி விட்டார்கள் . இவர்களின் பொறுப்பற்ற போக்கினால் மதத் தீவிரவாதிகள் வடக்கு கிழக்கில் காலூன்ற ஆரம்பித்து விட்டார்கள் என்று குறிப்பிட்டு உள்ளார். இது மிகச் சரியே. சம்பந்தன் - மாவை- சுமந்திரன் தலைமை, தடுமாற்றமும் தள்ளாட்டமுமாகதான் இருந்தது. இதுவே இவர்களின் வாக்கு வங்கி பெரிய அளவில் சரியக் காரணமானது. தலைமையைப் பற்றி குசால் பெரேரா எழுதியவற்றை குறிப்பிட்ட இந்த புலம்பெயர் தமிழன், புலம்பெயர்வாதிகளின் முதிர்சியற்ற, யதார்தமற்ற, பூகோள அரசியல் அறிவு அறவே அற்ற நிலைப்பாடுகளை பற்றி குசல் பெரேரா குறிப்பிட்டவற்றை சாதுர்யமாக ஒதுக்கியது ஏனோ?

மாறாகப் புலம்பெயர் தமிழன் தாங்கள் போராட்டத்திற்கு ஆயுத கொள்வனவு உட்பட, நிதி உதவி வழங்கியது போன்றவற்றை குறிப்பிட்டு இருந்தார். நல்லது, இது பாராட்டத்தக்கதுதான். ஆனால் இவர்களின் கண்மூடித்தனமான ஆதரவு இறுதியில் எங்கு கொண்டு போய் நிறுத்தியது? நீங்கள் போராடுங்கள் பணத்தை பற்றிக் கவலைப்படவேண்டாம் என்ற உத்திரவாதத்தை முழுவதுமாக நம்பியதால் புலிகளுக்கு அழிவே மிஞ்சியது. 9/11 இன் பின்னரான அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப் பிரகடனத்தின் தாக்கங்களை அன்டன்

தொடர்ச்சி 7ம் பக்கம்...........




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# புலம்பெயர் தமிழர்களின் பொம்மைகளா....

பாலசிங்கம் உணர்ந்து கொண்டமையினால்தான் ஒரு அரசியல் தீர்வை நோக்கி புலிகளை அழைத்துச் சென்றார். ஆனால் அவரை ஓரங்கட்டினார்கள். அதற்கும் இந்தப் புலம்பெயர் புல்லுருவிகள்தான் காரணம். அவர்களை நம்பிப் புலிகள் பேச்சுகளை முறித்துக்கொண்டார்கள். சமாதானத்திற்கு அஞ்சி மகிந்தவுடன் ஒப்பந்தம் செய்து மக்களைப் பலவந்தமாக ரணிலுக்கு வாக்களிக்கவிடாமல் தடுத்தார்கள். இறுதியில் நரிக்குப் பயந்து சிங்கத்தின் வாய்க்குள் தலையை கொடுத்த கதையாக முடிந்தது.

மேலும் வடக்கு கிழக்கு மக்களின் மேல் திணிக்கப்பட்ட இந்த பலவந்தமான தேர்தல் பகிஷ்கரிப்பின் பின்னரே மேற்குலக நாடுகள் புலிகளின் சமாதான தவிர்ப்பு நிலைப்பாட்டை புரிந்து கொண்டனர். அதன் பின்னரே புலிகளை முற்று முழுதாக முறியடிக்கும் மகிந்தவின் நடவடிக்கைகளுக்கு மேற்குலகு ஆதரவு நல்கியது. இறுதிக்கட்டத்தில் 6 ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டன. மேற்குலகு நாடுகள் சில வழங்கிய உளவுத் தகவல்களினால்தான் புலம்பெயர்ந்தவர்களின் மொத்தப் பணமும் கடலில் வீணாகிப் போனது. அவர்களால் புலிகள் அழிக்கப்பட்டதும் தான் மிச்சம். இவ்வாறு உலக கள நிலையை (ஆளலி ஶ்ரீலியிஷ்மிஷ்உவி) உணராமல் இன்னும் போலித் தமிழ்த் தேசியம் பேசி தாயகத்தில் ஏதோ ஒரு சமாதான தீர்வேனும் வரவிடாமல் உறுதி செய்வதே இவர்களின் குறுகிய நோக்கம். அதனால்தான் உலகத் தமிழர் பேரவை சில பௌத்த பிக்கு தலைவர்களுடன் முன்னெடுத்த நிகனழ்வுகளை கண்மூடித்தனமாக எதிர்த்தார்கள். முதன் முறையாக நியாயமாக சிந்திக்கும் பௌத்த குருமார்களும் சமாதான முயற்சியில் இறங்கி உள்ளது வரவேற்க வேண்டிய விடயமாகும். இதைவிட்டு உலகத் தமிழ் பேரவை அங்கத்தவர்களை சகட்டுமேனிக்கு தாக்கினார்கள். யாரும் எந்த அரைகுறை தீர்வையும் தமிழ் மக்கள் மேல் திணிக்க முடியாது என்பதை சிக்கல்களே நிரம்பிய நமது வரலாறு சொல்லும். என்னதான் நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்காமல், ஆரம்பத்திலேயே இந்த முயற்சிகளை கிள்ளி எறிய நினைப்பது முறையா? காரணம் என்னவென்றால் தங்களை மீறி ஏதாவது நல்ல விடயங்கள் நடந்து விடுமோ என்ற பயம்தான் இந்த புலம் பெயர் கூட்டங்களுக்கு.

இறுதிப் போர் நாட்களில் இவர்களின் நடவடிக்கைள் நகைப்பிற்குரியது. கனடாவின் ஒரு நெடுஞ்சாலையை 5-6 மணித்தியாலங்களிற்கு மூடுவதன் மூலம் போர் நிறுத்தத்தை இலங்கையில் கொண்டுவர கனடா அழுத்தம் கொடுக்கும் என்று நினைத்த ஞான சூனியங்கள் இந்த புலம்பெயர்வாதிகள்! அன்று அன்னையர் தினம் என்பதால் பல கனேடிய மக்களும் தங்கள் அம்மாக்களை சந்திக்க நேரத்திற்கே பூங்கொத்து கூறும், பரிசுகளும் வாங்கிக் கொண்டு கிளம்பிய நாள். இந்த வீதித் தடையால் மிகப் பெரும்பாலானோர் தங்கள் தாய்மார்களை அன்று சந்திக்கவே முடியாமல் போனது. விரக்தியில் நொந்து போய் கனேடிய மக்கள் பலரும் இந்த கூட்டத்திற்கு சிறிலங்கா அரசின் அடக்குமுறை சரியேதான் என்று கூறினார்கள் என்று எனது நண்பர்கள் பலர் தெரிவித்தார்கள். வாழவைத்த நாட்டிலும் புத்திசாலித்தனமற்ற நகர்வுகளால் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டவர்கள்தான் இவர்கள். மேலும் இறுதி நாட்களில் நிகழ்ந்த இந்திய தேர்தல்களில் பிஜேபி அரசும், ஜெயலலிதா அம்மையாரின் அதிமுகவும் ஆட்சியை பிடிக்கும், சற்று தாக்குப் பிடியுங்கள் என்று வேறு பிரபாகரனுக்கு பொய் நம்பிக்கையை ஊட்டினார்கள். இறுதியில் அதுவும் பிழைத்துக் போனது. கொடுமை என்னவென்றால் இந்தியாவே ஈழத்தமிழர் விடயத்தில் தலையிடாதே என்று முழங்கி அந்த ராணுவத்தையும் சண்டையிட்டுவெளியேற்றிவிட்டு, மாவிலாறு அணையைத் தடைசெய்து போரை ஆரம்பித்துவிட்டு இறுதியில் தலைக்கு மேல் வெள்ளம் வரப்போவது தெரிந்ததும் மீண்டும் இந்தியா தலையிடும் என்று எதிர்பார்த்த இவர்களின் மடமையை என்னவென்று சொல்வது!

அரசியல் ஆய்வாளர் டிபிஎஸ் ஜெயராஜ், மற்றும் சமீபத்தில் மறைந்த ஈழவேந்தன் போன்றோரை வசைபாடி வந்தார்கள், காரணம் அவர்கள் நேர்படவும் நியாயமாகவும் எழுதி வந்ததால்தான். இந்த நிலையே தாயகத்திலும் இருக்கவேண்டும் என்ற இவர்களின் நிலைப்பாட்டால்தாங்கள்சொற்படிஆடக்கூடியதலைவர்களை விலைக்கு வாங்கி, மிதவாதிகளை ஒதுக்கி ஓரங்கட்டும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஒருகாலத்தில் நன்கு படித்த பிரபலமான தலைமைகளை கொண்டிருந்த ஈழத்தமிழர்கள் இன்று புலம்பெயர் கைப்பொம்மைகளாக விளங்கும் "ஆமாம் சாமிகளை' தலைவர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டிய காலமாகி இருப்பது சாபக்கேடு.

அதற்காக ஒட்டுமொத்த புலம்பெயர் தமிழர்களையும் நான் குறை கூறுவதாக எடுக்கக்கூடாது. பெரும்பாலானோர் தாங்களும் தங்கள் பாடுமாக வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். இந்த சிறிய குழப்பவாதிகளின் போக்குகளில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை. மேலும் சிலர் தாயகத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து கஷ்டப்படும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ள அதேவேளையில் நாதியற்ற பெண் தலைமை குடும்பங்கள் பலவற்றிற்கு வருமானம் கிடைக்க வழி செய்திருக்கிறார்கள். இவர்களின் தன்னலமற்ற சேவைகளுக்கு நிச்சயமாகத் தலை வணங்கவேண்டும்.

இறுதியாக, சிறிதரன் சுமந்திரன் இருவரும் தங்களது தலைமைத்துவ பண்புகளை இப்போதாவது நிரூபிக்க வேண்டும். எமது இனத்தின் நன்மை கருதி. இருவரும் பரஸ்பரம் புரிந்துணர்வோடு வேறுபாடுகளை களைந்து எல்லோரையும் ஒன்றாக அணைத்துச் சென்று, பெறவேண்டிய நியாயமான ஆனால் சாத்தியமான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். தனிப்பட்ட நலன்களை பின்தள்ளி, நீயா நானா என்ற அகந்தை (ஈகோ) இன்றி ஒன்றாகப் பயணித்தால் மட்டுமே அரகலயவின் பின்னரான தென்னிலங்கையில் வந்து கொண்டு இருக்கும் மாற்றங்களை தமிழ் இனத்திற்கு சாதகமாக மாற்றி ஒரு தீர்வின் ஆரம்ப புள்ளியையாவது எட்டலாம். காலப்போக்கில் நிலையை வலுப்படுத்தி மேலும் விரிவுபடுத்தலாம். பணத்திற்காக ஆட்டுவிக்கும் சில புலம்பெயர் வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றபடி தலையாட்டிக்கொண்டுதீர்வேதும்கிடைக்காதபடிநந்திபோல் குறுக்கே நிற்க வேண்டாம். எல்லா பண நன்கொடைகளும் கட்சியின் கணக்கிலேயே வர ஆவன செய்ய வேண்டும். தனிப்பட்ட நபர்கள் பணம் பெறுவது முற்றாக நிறுத்தப்பட வேண்டும். நேரம் உங்கள் பக்கம் இல்லை என்பதை மறக்க வேண்டாம். அடுத்த தலைமுறைகள் எதிர்பார்ப்பது முறையான தீர்வும், தொடர்ந்த அபிவிருத்தி மற்றும் சமூக பொருளாதார மறுமலர்ச்சியுமே. இதைப்பற்றி 22/02 காலைக் கதிரில் வெளிவந்த கட்டுரையில் விவரமாக எழுதி இருந்தேன்.

இந்த மாற்றங்களை உங்களால் முன்னெடுக்க முடியாவிட்டால் இளையவர்களுக்கு வழிவிட்டு மொத்தமாகவே ஒதுங்கி விடுங்கள். சென்ற 2020 தேர்தலில் மக்களின் அதிருப்தி ஓரளவு உங்களுக்கு உணர்த்தப்பட்டது. அடுத்த முறை வழித்து துடைத்தெறியப்படாமல் இருக்க உடனடியாகவே உங்களின் குறுகிய வட்டங்களில் இருந்து வெளியே வரவேண்டும் என்பதே சரியாகச் சிந்திக்கும் மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.



காலைக்கதிர் Kalaikkathir

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முகமாகவும் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கையாக இன்று வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட முன்றலில்கவனயீர்ப்புஆர்ப்பாட்டம் ஒன்றுநடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் என்றார்.

## ஆட்கடத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ரஷ்ய-உக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இவ்விடயம்குறித்துஜனாதிபதிரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆள் கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு, எதிராக தராதரம் பாராமல், சட்டத்தின்மூலம்அதிகபட்ச தண்டனைவழங்கப்படும்என்பதை முதலில் வலியுறுத்த வேண்டும். மேலும், இந்தவிவகாரம்தொடர்பாக சுமார் 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைதுசெய்யப் பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆள் கடத்தல் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆள் கடத்தலில் பலர் சிக்கி உள்ளனர். எனவே, இந்தஏமாற்றுமுயற்சிகளில் பொதுமக்கள் சிக்கிக்கொள்ள வேண்டாம் என அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த ஆள் கடத்தல் தொடர்பில் மேலதிக தகவல்கள் தெரிந்தால் 0112 401146 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு கோருகிறோம்.

அத்துடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி முற்றாக அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 55 வயதின் பின்-னர் அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியமோ வழங்கப்படாதது குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் கவனம் செலுத்தியது. முப்படைகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட இந்த சலுகை சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். எனவே, இதுதொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதியைப் பெற எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், சட்டபூர்வமாக இராணுவத்தை விட்டு வெளியேறாமல் இராணுவத்தைவிட்டுவெளியேறியவர்களுக்குபாதுகாப்புஅமைச்சினால் வழங்கப்பட்டபொதுமன்னிப்புகாலம் எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. தற்போது பொதுமன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357 ஆக காணப்பட்டது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் சேவையிலிருந்து விலகி மீண்டும் பணிக்குத் திரும்பியவர்களின் எண்ணிக்கை 799 என அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ வீரர்களுக்கான காணிகளை விரைவாக வழங்குவதற்கும் சலுகைகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். உறுமய வேலைத்திட்டத்துடன் ஒரே நேரத்தில் இடம்பெறும் இந்தப் பணிகளுக்குகாணிஅமைச்சும்அதிக பங்களிப்பை வழங்கியுள்ளது. இது இராணுவ வீரர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட தனித்துவமான நடவடிக்கை என்பதை குறிப்பிட வேண்டும் என்றார்.

## அஷ்ரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

திறமையான சட்டத்தரணியும் சிறந்த சட்டமியற்றுபவருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், புகழ்பெற்ற அரசியல்வாதி என்பதோடு அவர் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்காக பெரும் பணியாற்றியுள்ளார்.

முன்மாதிரியான மற்றும் மனிதாபிமானம் நிறைந்த மக்கள் பிரதிநிதியான அவர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மிகவும் மதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத்தொகுதியைஇன்றுகாண்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தத் திட்டத்தை துரிதமாக முடிக்க எங்கள் பொறியியல் துறை பெரும் அர்ப்பணிப்பை மேற்கொண்டது.தற்போதையஆளும் தரப்பால் இதுபோன்ற பல புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிகளைத் திறக்க முடிந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நீதித்துறையின் முன்னேற்றத்திற்காகச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்துள்ளார். ஒரு நாட்டுக்கு நீதித்துறை மிகவும் முக்கியமானது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள்தவிக்கும்நேரத்தில், இந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் இருக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கநாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக்கொண்டார். தற்போதைய ஆளும் தரப்பு இந்த நாட்டைக்கட்டியெழுப்புவதில்பெரும் பங்காற்றியது.

அத்துடன்நாட்டின்பொருளாதார வளர்ச்சி, சட்டத்தின் ஆட்சி நிலை நாட்டப்பட்டது. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஒரு நாடு முன்னேற முடியாது. கடந்த இரண்டு வருடங்களில்எமதுநாட்டில்சட்டத்தின் ஆட்சிபுத்துயிர்பெற்றுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டுஊழல், இலஞ்சஒழிப்பிற்கான புதியசட்டங்கள்கொண்டுவரப்பட்டன.

நீதித்துறையை வலுப்படுத்துவதன்மூலம்எதிர்காலத்தில்மோசடி, ஊழல், குற்றச்செயல்களைத் தடுக்க புதிய சட்டவிதிகள் இயற்றப்படும் என்றார்

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலந்துரையாடலில், நாட்டின் அபிவிருத்தி தொடர்பான கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதாக பொதுஜனபெரமுனதெரிவித்துள்ளது.

இதனிடையே பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார நடவடிக்கை, மே26 அனுராதபுரம் கலாவாவி தேர்தல் தொகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அங்கிருந்து தொகுதி மட்டத்தில் பரப்புரைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மே 18 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே வடக்கு மாகாண சபையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதனைஉணர்வுபூர்வமாகதமிழர் தாயகமெங்கும் அனுட்டிக்கத் தமிழ்த் தேசிய சக்திகளோடு கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

இந்த நாளில் முள்ளிவாய்க்கால் சென்றுநினைவேந்தக்கூடியவர்கள் வழமைபோன்றுமுள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு ஒழுங்கு செய்த நிகழ்வுகளில் பெருந்திரளாகப் பங்கேற்குமாறு வேண்டி நிற்கின்றோம் அதேநேரம் அங்கு செல்லமுடியாதவர்கள்தங்கள்பிரதேச வழிபாட்டுத்தலங்களில் ஒன்றுகூடி பிரார்த்தனைகளைமேற்கொள்ளவும் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் அனைத்து தமிழர் வணிக வளாகங்களிலும், பொது இடங்களிலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுமாறும் கறுப்புப் பட்டியுடன் கடமைகளில் ஈடுபடுமாறுமகோருகின்றோம். எமதுதெருக்களை, பொது இடங்களை, வீட்டின் முன்னுள்ள வீதியோரங்களைத் துப்பரவு செய்வதுடன் அனைத்து கேளிக்கைநிகழ்வுகளையும்தவிர்த்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு நேரஉணவாகவேனும்உண்பதற்கு ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் முன்வருவோம்.

மேலதிக தனியார் கல்வி நடவடிக்கைகள் அனைத்தையும் அன்றைய தினம் முழுமையாக நிறுத்திஎம்இளையோருக்குஎம்வலிகளின் ஆழத்தை சாத்வீகமாக உணர்வபூர்வமாக வெளிப்படுத்துவோம். பல்கலைக்கழக மாணவர் எற்பாடுசெயதுள்ள இந்தக் காலப்பகுதிக்கான குருதிதான முகாம்களில் பங்கேற்போம்.

வலி சுமந்த குடும்பங்களுக்கு மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆறுதல் அளிப்போம். இந்தத் தமிழ்த் தேசிய துக்க நாளில் ஒட்டுமொத்த தமிழராய் நிலத்திலும் புலத்திலும்எம்உச்சபட்சஆத்மார்த்த உணர்வை அமைதியாக - உறுதியாக வெளிக்காட்டுவோம். அதற்காக அனைவரும் திடசங்கற்பம் பூணுவோம் -- என்றுள்ளது.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின்கீழ், 186ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், ஹொரோவ்பதான, கஹடகஸ்திகிலிய, முக்கிரியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது, பாடசாலைஅபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் உள்ள சிலர் வாக்குறுதிகளைநம்பாவிட்டாலும், வாக்குறுதி விடயத்தில்தன் மீது அவநம்பிக்கை கொள்ள எந்த காரணமும் இல்லை என சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், வேறு எந்தவொரு எதிர்க்கட்சி குறித்தும் மக்களுக்கு நம்பிக்கையில்லாது போனாலும், தானும் தனது குழுவினரும் இதில் அடங்க மாட்டார்கள் என அவர் தெரிவித்தார்.

புதியதொருபயணம், புதியதொரு திட்டம், புதியதொரு செயல்முறை ஊடாக சொல்வதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம். இது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் உயர்கல்வி வீழ்ச்சியடைந்துவரும்தருணத்தில்இலவசக் கல்விக்கு மரண அடி விழுந்து வருகிறது. இலவசக்கல்வித்துறையில் பிரச்சினைகள் இருந்தாலும் தனியார் கல்வித்துறையில் பிரச்சினைகள் நிலவவில்லை. தற்போது கல்வித்துறையில் வேலைநிறுத்த அலை வீசுகிறது.

கல்வித்துறையில் எங்கும் வேலைநிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் அவர்களுக்கு உரிய சலுகைகளை வழங்க முடியாமல் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir

# செலற் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருடன் திருமலை எ.ரி.ஐ. தொடர்பாக இம்ரான் கலந்தாய்வு



(கே எ ஹமீட்)

இலங்கை உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அதாஉத செனவிரத்ன அவர்களை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அவர்கள் நேரில் சந்தித்து திருகோணமலை மாவட்டத்தில் வரோதயநகர் பகுதில் இயங்கிவருகின்ற இலங்கை உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனத்தின் திருகோணமலைவளாகத்தின்பௌதீகவள அபிவிருத்தி மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் சந்தித்து சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் திருகோணமலை மாவட்டத்திற்கு நேரில் களவிஜயம் செய்து வளாகத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையும் பார்வையிடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபின் வேண்டுகோளை செவிமடுத்த நிறைவேற்றுப் பணிப்பாளர் அதாஉத செனவிரத்ன விரைவில் திருகோணமலை வளாகத்தை பார்வையிட வருவதாகவும் உறுதியளித்துள்ளார்.(05)

# பதவி உயர்வு பெற்று புதிய பதவியேற்றார் முன்னாள் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் 15 மாதங்களுக்கு மேல் சேவையாற்றிய முன்னாள் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் பதவி உயர் பெற்று கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) கடமையைப் பொறுப்பேற்றார்.

அதேநேரம் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பணிப்பாளராக இருந்து முஸ்லிம் சமூகத்தினதும்நாட்டினதும்நலனில்அக்கறைகொண்டு குறுகிய காலத்தில் அரும் பெரும் சேவையாற்றிய முன்னாள் பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைஸலுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நலன்புரி சங்கம் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து ஏற்பாடுசெய்திருந்தனர்.

அரநாயக்க தல்கஸ்பிடியவைச் சேர்ந்த இவர், அரநாயக்க பிரதேச செயலாளராக 7 வருட காலம் பணிபுரிந்து பெரும்பான்மை மக்களின் அபிமானத்தை வென்று அம்மக்களால் மிகவும் விரும்பத்தக்க ஓர் அதிகாரியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவி உயர்வு பெற்று செல்லும் முன்னாள் பணிப்பாளர் பைசல் ஆப்தீனுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதோடு, அவரது எதிர்காலம் சிறப்புற்று விளங்க பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.(05)

# 21 லட்சம் ரூபாய் வரையான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் கைதானார்

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 21 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய வர்த்தகரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் செவ்வாய்க்கிழமை இரவு 10.15 மணியளவில் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் இவர் விமான நிலையத்தின் அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முடித்துவிட்டு விமான நிலையத்தை விட்டு வெளியேற முற்படும் போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபர் கொண்டுவந்த பயணப்பொதியிலிருந்து 21லட்சம் ரூபா பெறுமதியான 21,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 105 சிகரெட்டு கார்ட்டூன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் தற்போது பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# யானைத் தாக்குதலில் ஒருவர் பரிதாபச் சாவு

திருகோணமலை,சூரியபுர பொலிஸ் பிரிவிற்குற்பட்ட சிங்க வெள பகுதியில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார் என சூரியபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை,சூரியபுர பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது மருமகனுடன் மாடுகளை மேய்ப்பதற்காக வனப்பகுதிக்குச் சென்றிருந்த போதே இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும்தெரிவித்தனர்.இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# 24 மணித்தியாலங்களிற்குள் 7 மாணவிகள் துஷ்பிரயோகம்

## சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள், 16 வயதுக்குட்பட்ட ஏழு பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது .

இந்த பாடசாலை மாணவிகள் 12, 14, 10 மற்றும் 15 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் , மனம்பிட்டிய, மாங்குளம், இரத்தினபுரி, வெல்லம்பிட்டிய, வெலவாலி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன்அவர்களைக்கைது செய்ய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அ’புரத்தில் வெள்ளை வான் கடத்தல் சட்ட மா அதிபரின் விசாரணை தேவை

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

*அனுராதபுரத்தை சேர்ந்த கபிலகுமாரடிசில்வாஎன்பவர் பலவந்தமாக கடத்தப்பட்டது தொடர்பில் சட்டமா அதிபர் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்கவேண்டும் என இலங்கையின்மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.*

*அனுராதபுரம் ஹொரவப் பொத் தானையை சேர்ந்த கபிலகுமார டிசில்வா கடத்தப்பட்டு இரகசிய மறைவிடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.*

*இலங்கையை மிகநீண்ட காலமாக பாதித்துவரும் பலவந்த காணாமல்போகச்செய்தல் மீண்டும் தலைதூக்குகின்றது என்ற அச்சத்தின் மத்தியில் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு இந்த வேண்டுகோளைவிடுத்துள்ளது.*

*கபிலடிசில்வா என்பவர் காணாமல் போனதன் பின்னணியில்உள்ள அச்சத்தை ஏற்படுத்தும் விடயங்கள் குறித்துஇலங்கைமனிதஉரிமை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல்டிபி தெகிதெனிய கடிதமொன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளார்.*

*மார்ச் 27 ஆம் திகதி முதல் கபில டிசில்வா என்பவர் காணாமல் போயுள்ளார் என அவரது தாயார் தெரிவித்துள்ளார் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*விசேடஅதிரடிப்படையினர் கபில டி சில்வாவை கைதுசெய்தனர் என அவரது தாயார் முறைப்பாடு செய்துள்ளார் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.*

*மார்ச் 29 ஆம் திகதி விசேட அதிரடிப்படையினர் கபில டி சில்வா வின் வீட்டிற்கு சென்றனர் அவர் எங்கு என விசாரித்தனர் என தாயார் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.*

*அவர் துப்பாக்கி பிரயோக சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக காணப்படுகின்றார் எனினும் அவரை தாங்கள் கைதுசெய்யவில்லை என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர் எனினும் சில்வா பிட்டிகல பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும்பின்னர் காலி சிறைச்சாலையில்உள்ளதாகவும்தகவல் கிடைத்தது எனவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*காலி சிறைச்சாலைக்கான விஜயத்தின் போது இலங்கைமனித உரிமை ஆணைக்குழுவினர்சில்வாவின் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர் மார்ச் 26 ஆம் திகதி சீருடை அணியாத தங்களை பொலிஸார் என தெரிவித்த நபர்கள் தன்னை கைதுசெய்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார் எனவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.*

*கண்ணைக்கட்டி வெள்ளை வானில் இரகசிய இடத்திற்கு கொண்டு சென்றனர் தாக்கினர் விசாரணை செய்தனர் என சில்வா தெரிவித்துள்ளார் இறுதியில் தான் சந்தேக நபர் இல்லை என உறுதி செய்து பிட்டிகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் எனவும் மனித உரிமைஆணைக்குழுவின்தலைவர் தெரிவித்துள்ளார். (05)*

# திருகோணமலையில் மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் மாற்றுத்திறனாளிகளை



வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலைநகரசபைபொதுநூலகமண்டபத்தில் நேற்று (புதன்கிழமை) காலை 9.30 மணிக்கு விசேட தேவையுடையோருக்கான சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கௌரிசாந்த்



தலைமையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்திருகோணமலைநகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் , மாவட்ட சமூக சேவை இனைப்பாளர் த. பிரனவன், பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. புரபானந்தன் நகரசபை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந . யோகேஸ்வரன், நூலகர் றிம்சானா, நூலக உதவியாளர்களான அ . அச்சுதன், உ . ரஜனிக்காந்த் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (05)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மத்திய கிழக்கின் நாடொன்றுக்கு நிரந்தர அங்கத்துவம் வழங்குக

## ஹரீஸ் எம்.பி. உலகத் தலைவர்களை வலியுறுத்து

(நூருல் ஹுதா உமர்)

ஐரோப்பாகண்டத்துக்கும், ஆசியகண்டத்துக்கும், அமெரிக்க கண்டத்துக்கும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை இருக்கும் போது ஆபிரிக்க கண்டத்துக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் 70 வருடங்களுக்கு மேல் ஏன் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமை வழங்கவில்லை. அந்த நாடுகளை ஒரவஞ்சனை செய்து ஓரங்கட்டி வைத்திருக்கும் நிலையில் அந்த நாடுகளில் உள்ள மக்களை கொன்று குவிக்கும் போது இனிமேலும் வேடிக்கை பார்க்காது சக்திமிக்க நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்று அதிகாரமிக்க நிரந்தர உறுப்புரிமையை மத்திய கிழக்கின் நாடொன்றுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளை சமாதானத்தை விரும்பும் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றும் போது -

றபா பிரதேசத்தில் மில்லியன் கணக்கான மக்களை சுற்றி வளைத்து வதைமுகாம் போன்று சாப்பாடு, தண்ணீர் எதுவும் வழங்காமல் இஸ்ரேலிய இராணுவம் கொடுமைப்படுத்தி வருகிறது. மட்டுமின்றி, நிராயுதபாணியான அப்பாவி மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொள்கிறது. அதை கண்டிக்க முடியாதவாறு மனித உரிமை பேசும் அமைப்புக்களும், சர்வதேச தலைவர்களும் மௌனியாக இருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கும் இஸ்லாமிய நாட்டின் தலைவரான எகிப்திய ஜனாதிபதி கூட இஸ்ரேலிய இராணுவம் றபா பிரதேசத்தில் உள்நுழைய உடந்தையாக இருந்து அங்கு இடம்பெறும் பலஸ்தீனியர்களின் கொலைகளுக்கு பங்குதாரராக மாறியிருக்கிறார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை மரண தண்டனை வழங்கிக் கொன்ற எகிப்திய ஜனாதிபதி இன்று இஸ்ரேலின் காவடி எடுத்து ஆடுகிறார். நீதியை போதிக்கும் நிறுவனங்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், மனித உரிமை பேரவை போன்றன மௌனித்து விட்டது. ஐ.நாவின் கட்டமைப்பு தோல்வியடைந்துள்ள நிலையில் ஐ.நாவின் கட்டமைப்பை மறுசீரமைக்க உலகநாடுகள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இன்று அமெரிக்காவும், ஜெர்மனும், பிரித்தானியாவும் பாதுகாப்பு சபையின் மறுசீரமைப்பைப் பற்றி பேசுகிறது. உலகில் அதிக சனத்தொகை கொண்ட இந்தியாவுக்கு நிறைவேற்று அதிகாரமிக்க நிரந்தர அங்கத்துவம் பாதுகாப்பு சபையில் வழங்கப்பட கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளன.

56 நாடுகளின் கூட்டிணைவான இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் அதைவிட பல மடங்கு சனத்தொகை கொண்டுள்ளது. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளுக்கென்று இந்தப் பாதுகாப்பு சபையில் அங்கத்துவம் வழங்கப்படவில்லை. அதனை உறுதிப்படுத்தி ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்று அதிகாரமிக்க நிரந்தர உறுப்புரிமையை மத்திய கிழக்கின் நாடொன்றுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளை சமாதானத்தை விரும்பும் உலகத்தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.(05)

# தான் பெற்ற குழந்தையைக் கைவிட்டு தப்பிய சிறுமி பொலிஸிடம் சிக்கினார்

## இளைஞன் ஒருவரும் கைது

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரசவித்த குழந்தையைகைவிட்டுசென்ற 15 வயதுடையசிறுமி செவ்வாய்க்கிழமை பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

யாழ்.போதனாவைத்தியசாலையில்கடந்தவாரம் 15 வயதான பாடசாலை மாணவி பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தார். தாயாரும் குறித்து சிறுமியுடன் உதவிக்கு நின்றுள்ளார்.

சிறுமிக்கு குழந்தை பிறந்ததும் மறுநாள், தாயும் சிறுமியும் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டுவிட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சிறுமி நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்தவர் என கண்டறிந்து , அது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் , குழந்தையை பிரசவித்த சிறுமியையும் அவரது தாயாரையும் கண்டறிந்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், மாணவியை வன்புணர்வுக்குட்படுத்தி, கர்ப்பமாக்கிய மல்லாவி பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு சென்ற இரண்டு மாணவிகள் மாயம்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத்தோற்றுவதற்காகப்பரீட்சை நிலையத்திற்குச்சென்றஇருமாணவிகள் மீண்டும் வீடு திரும்பவில்லை என முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவிகள் இருவரும் செவ்வாய்க்கிழமை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பரீட்சை நிலையத்திற்குச் சென்றுள்ள நிலையில் அவர்களில் ஒரு மாணவி தனது பெற்றோருடன் பரீட்சை நிலையத்திற்குச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன இரு மாணவிகளும் நெருங்கிய நண்பர்கள் எனவும் இவர்கள் இருவரையும் பரீட்சை நிலையத்திற்கு அருகில் வைத்துப் பார்த்ததாகவும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிலர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மனைவியைக் கொன்று கழிவறையின் குழியில் புதைத்து வைத்த கணவன்

## 4 வருடங்களின் பின்னர் கைது

மனைவியைக் கொலை செய்த பின்னர் 4 வருடங்களாகத் தலைமறைவாக இருந்த கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

இந்த கொலை சம்பவமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஹினிதும பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துடுகல்ல பிரதேசத்தில் இடம்பெற்றது.

சந்தேக நபரான கணவன் 2020 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் திகதி தனது மனைவியைக் காணவில்லை என்று ஹினிதும பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் .

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது முறைப்பாடு செய்த கணவர் மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதன் போது , பொலிஸார் கணவரிடம் நடத்திய விசாரணையில் தனது மனைவியை அடித்துக் கொன்றதாக அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட 44 வயதுடைய பெண்ணின் சடலம் கழிவறை குழியில் புதைக்கப் பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது .

பின்னர் குறித்த பெண் கொல்லப் பட்டுப் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் கழிவறை குழியை பொலிஸார் சோதனையிட்ட போது பெண்ணின் சடலத்தின் பாகங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# கம்பளையில் மாடியிலிருந்து வீழ்ந்த பெண் உயிரிழப்பு

கம்பளை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பிஹில்லதெனிய பகுதியில் உள்ள வீடொன்றின் முதலாம் மாடியிலிருந்து வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை, பிஹில்லதெனிய பகுதியைச் சேர்ந்த 35 வயது பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் பிஹில்லதெனிய பகுதியில் உள்ள வீடொன்றின் முதலாம் மாடியிலிருந்து வீழ்ந்து காயமடைந்துள்ள நிலையில் கம்பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஏ9 வீதி ஓமந்தையில் அமைக்கப்பட்ட இராணுவ சோதனை சாவடி அகற்றம்

கொரோனா காலப்பகுதியில் ஏ9 வீதியில் வவுனியா ஓமந்தை பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவ சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் கொரோனாபரவல் தீவிரமடைந்ததையடுத்து நாடாளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் மற்றும் போஜுக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் பல சோதனை சாவடிகள் அகற்றப்பட்ட நிலையில் ஓமந்தை சோதனை சாவடி மாத்திரம் நான்கு வருடங்களாக அகற்றப்படாமல் நிரந்தர இராணுவ சோடி சாவடியாக இயங்கியது. இந்நிலையில் குறித்த இராணுவ சோதனைச் சாவடி செவ்வாய்க்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 - 100)

# துப்பாக்கிகள், தோட்டாக்கள் பிலியந்தலையில் சிக்கின

பிலியந்தலை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வீட்டில் ரி 56 ரக துப்பாக்கி, 4 மகசீன்கள், 116 துப்பாக்கிகள் , 90 ரி 56 உயிருள்ள தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் இந்த இடத்திற்கு எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# பேரினவாத மனநிலையை அரசு வெளிப்படுத்தியது

**அகத்தியர் அடிகளார்**

தங்கள் உறவுகளை நினைந்து கஞ்சி காய்ச்சி பரிமாறுவதை தடுப்பதன் மூலம் அரசு தனது பேரினவாத மனநிலையை வெளிப்படுத்தியிருப்பதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மூதூர் - சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பறிமாறிய குற்றச்சாட்டில் சம்பூர் பொலிஸாரால் அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நினைவு கூரல் என்பது ஒவ்வொரு மனிதனுடைய அடிப்படை உரிமையாகும். உலகளாவிய அனைத்து சர்வதேச சட்டங்களும் அதனை ஆழமாக வலியுறுத்துகின்றன. இந்நிலையில் திருகோணமலை சேனையூரில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் மிகுந்த வேதனையை ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் ஏற்படுத்தி உள்ளது.

சொல்லணாத்துயர் வலிசுமந்த இந்த நாள்களில் தங்கள் உறவுகளை நினைந்து பிரார்த்திப்பதற்கு அந்த நாள்களில் அவர்கள் பட்ட துயரத்தை கஞ்சி பருகி உயிரை பிடித்திருந்த அவலத்தை நீள நினைந்து தாமும் கஞ்சி காய்ச்சி குடிப்பதும் பரிமாறுவதும் குற்றமாக அரச இயந்திரத்தால் பார்க்கப்படுவது. இலங்கையில் 15 ஆண்டுகளாகியும் பேரினவாத மனநிலையில் மாற்றம் வராத கொடூர முகத்தின் வெளிப்பாடாகும். இது தொடர்ந்தும் இனங்களிற்கு இடையேயான நல்லெண்ணத்தை ஆழமாகப் பாதிக்கும் செயற்பாடாகும்.

புனிதமான கோவிலில் உறவுகளை நினைந்து கஞ்சி காய்ச்சிய பெண் பிள்ளைகள் உள்ளிட்டோரை அச்சுறுத்தியதோடு மட்டுமல்லாது இரவு வேளைகளில் அவர்களது வீடுகளுக்குச் சென்று அராஜகமாகக் கைது செய்த செயல் மிகுந்த கண்டனத்துக்குரியது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒருமித்து பாரிய எதிர்ப்பை வெளிக்காட்டி அரசின் கோர முகத்தை துகிலுரித்து அப்பாவிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ்த்தேசியம் பரப்பில் வாழும் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையை தற்போதும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றிருப்பதும், பிணைகூட வழங்கப்படாமல் பெண்பிள்ளைகள் உள்ளிட்டோர் விளக்கமறியலில் இரு வாரம் வைக்கப்பட்டிருப்பதும் மனதை வருத்துகின்றது.

எனவே, உடனடியாக அனைத்து தமிழ்த்தேசிய சக்திகளும் இவர்களின் விடுதலைக்கு சகல எத்தனங்களைச் செய்ய வேண்டுவதுடன் அனைத்து முற்போக்கு மற்றும் உலகளாவிய சக்திகளதும் கவனத்தை ஈர்த்து அரசிற்கு அழுத்தத்தை பிரயோகித்து நினைவுகூரலுக்கான உரிமையை உறுதிப்படுத்துமாறும் வலிசுமந்த இந்த நாள்களில் உங்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

சேனையூர் புவனகணபதி ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறிய குற்றச்சாட்டில் மூவர் உட்பட பல்கலைக்கழக மாணவி ஒருவரும் அன்றைய தினம் இரவு சம்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். குறித்த நால்வரும் மறுநாள் திங்கட்கிழமை மூதூர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்போது எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)




# தொழுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்த புதிய இணையதளம் அங்குரார்ப்பணம்

தொழுநோய் தொடர்பில் பொது மக்களிடையே படிப்படியாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொழுநோய் தடுப்பு இயக்கம் மற்றும் அலையன்ஸ் டெவலப்மெண்ட் டிரஸ்ட் நிறுவனத்தின் கூட்டு முயற்ச்சியில்உருவாக்கப்பட்டுள்ளபுதியஇணையதளம் செவ்வாய்க்கிழமை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

எக்ட்டுப்ரேவேன்ட் என்ற பெயரில் இந்த இணையத்தளம் செயற்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சரின் தலைமையில் இடம்பெற்றிருந்த இந்நிகழ்வில் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொஷான் மஹாநாம, அலையன்ஸ் டெவலப்மென்ட் டிரஸ்ட் நிறுவன பணிப்பாளர் ரகு பாலசந்திரன், தொழுநோய் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நிரூபா பல்லேவத்த, தொழுநோய் தடுப்பு இயக்கத்தின் முன்னாள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரனவீர, விசேட வைத்திய நிபுணர் திலினி விஜேசேகர, விசேடவைத்தியநிபுணர் இந்திராகாஹவிட்ட ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்

இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் செவ்வாய்க்கிழமை தொழுநோய் தடுப்பு இயக்கம் மற்றும் அலையன்ஸ் டெவலெப்மென்ட் ட்ரஸ் நிறுவனத்தினரால் புதிய தொழுநோய் பிரசார இணையத்தளம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. எக்ட்டுப்ரேவேன்ட் என்ற இணையதளம் வாயிலாகத் தொழுநோய் தொடர்பான விடயங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழுநோயாளர்கள் சமூகத்தின் பார்வையில் ஒதுக்கப்பட்டவர்களாக உள்ளனர். ஆகையால் தொழுநோயார்களுக்கான சமூக அங்கீராத்தை பெற்றுத்தரும் மாற்றத்திற்கான ஒரு முயற்சியாக இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. நோய்த் தொற்றுத் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள், நோயை ஆரம்பத்திலேயே கண்டறிதல், சிகிச்சைகள் தொடர்பில் விரிவான தகவல்கள் பகிரப்பட உள்ளன. தொழுநோயாளர்களின் குறுகிய மனப்பாங்கை இல்லாதொழித்து உரிய சிகிச்சைகளைப் பெற உதவும் வகையில் குறித்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

(05)

# ஆணொருவரின் சடலம் யக்கலமுல்லயில் மீட்பு

யக்கலமுல்ல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட துன்எலமோதர கிரிமெட்டிதொல பாலத்திற்கு அருகிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக யக்கல முல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர்கடந்த12ஆம்திகதியிலிருந்து காணாமல்போயிருந்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.(05)

# ஐரி படிக்கும் உயர்தர மாணவருக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்குக

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் அறிவுறுத்து

2022 (2023) ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றி தற்போது க.பொ.த. உயர்தரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்கும் மாணவ மாணவிகளுக்கு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி நிதியம் ஆகியவை ஒன்றிணைந்து வழங்கும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் 2024 2025 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித் தரத்தை மேம்படுத்தும் முகமாக உயர்தரத்துக்கு தெரிவாகி தகவல் தொழில்நுட்ப பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கமைய இலங்கை தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பினூடாக, ஜனாதிபதி நிதியம் வழங்கும் இப்புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துக்கு தகுதியுடைய மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்குமாறு அனைத்து பாடசாலை அதிபர்களையும் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு -

இலங்கையின் கல்வித்துறை மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி பெற்று தற்போது க.பொ.த. உயர்தரத்தில் தகவல் தொடர்பாடல்தொழில்நுட்பத்தைஒருபாடமாகக்கொண்டு கற்கும் மாணவர்களுக்காக ஜனாதிபதி நிதியதிலிருந்து புலமைப்பரிசில் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது க.பொ.த. உயர்தரத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பாடமாகக் கொண்டு கற்கும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைய வுள்ளது. விண்ணப்பத்தை பூர்த்தி செய்து எதிர்வரும் 22ஆம்திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தகைமைகள் :-**

- விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் 100,000 ரூபாவுக்கும் மேற்படாதிருத்தல் வேண்டும்.
- அரசாங்க பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன்/மாணவியாக இருத்தல் வேண்டும்.
- 2022(2023) ஆம்ஆண்டு நடத்தப்பட்ட க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. (உ.த.) கற்பதற்கான முழுத் தகைமைகளையும் பெற்று க.பொ.த (உ.த.) கற்பதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒருபாடமாக கற்கும் மாணவன்/மாணவியாக இருத்தல்.

விண்ணபத்தை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள ஜனாதிபதி நிதியத்திக்கு பதிவுத்தபால் மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :-

செயலாளர், சனாதிபதி நிதியம், இல. 35, மூன்றாம்மாடி, லேக்ஹவுஸ் கட்டிடம், டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு - 10.

இவ்விடயத்தில் அசட்டையாக இருக்காது தகுதிபெற்ற அனைவரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மலையக மாணவர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை காட்டல் வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை கல்வி இராஜாங்க அமைச்சரின் பதுளை, பண்டாரவளை, பசறை, மடுல்சீமை, லுணுகலை, எல்ல, அப்புத்தளை, உடப்புஸ்சல்லாவை ஆகிய காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை விண்ணப்பப் படிவங்களை இணையத்தள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

இத்திட்டத்தின்கீழ்சகலபாடசாலைஅதிபர்கள்தங்களது பாடசாலையில் கற்கும் தகுதியுடைய மாணவர்களை, விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளார்.

(05)

# இல்மனைற் அகழ்வுபணி அம்பாறையில் நிறுத்தம்

## ஜனாதிபதி – கோடீஸ்வரன்: சந்திப்பின் எதிரொலி

(வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்கோடீஸ்வரன் குழுவினர் மேற்கொண்ட சந்திப்பின்எதிரொலியாகபலமாற்றங்கள் நிகழவுள்ளன.

அம்பாறை தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இல்மனைற் அகழ்வு உடனடியாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம்(செவ் வாய்க்கிழமை) பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

அம்பாறைமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன்கோடீஸ்வரன்தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியுடன் இந்த சந்திப்பில் கலந்து கொண் டார்கள். சுமார் ஒரு மணி நேரம் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்த சந்திப்பில் மன்னர் மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன், சமூக செயற்பாட்டாளரும் மாணவர் மீட்பு பேரவை தலைவருமான செல்வராஜா கணேசானந்தம், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் க. சிவலிங்கம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேசதலைவர் கே.ஜெகநாதன்(குமார்) ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஜனாதிபதி தரப்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் உயர் அதிகாரிகள்கலந்துகொண்டார்கள்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றது . விரிவான மகஜரும் சமர்ப்பிக்கப் பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான கணக்காளர் நியமித்தல் மற்றும் புதிய கணக்கு ஆரம்பித்தல் தொடர்பாக ஆரம்பத்தில்விரிவாகபேசப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று அழுத்தமான கோரிக்கையை கோடீஸ்வரன் முன்வைத்தார்.

அப்படி அதனை செய்யும் பட்சத்தில்தங்களுக்கானஆதரவை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் முழுமையாக வழங்குவார்கள் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி அதனை பரிசீலீப்பதாகவும் பிரதமருடன் கலந்துரையாடிவிட்டு இதனை செயல்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

திருக்கோவில், ஆலையடி வேம்பு, பொத்துவில் போன்ற பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதாக குழுவினரால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால்கடல்தொழில்புரிகின்ற ஏனைய விவசாயத்துடன் தொடர்புபட்ட தமிழ் மக்கள் சுமார் 15 ஆயிரம் பேர் நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கி ன்றார்கள். வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

அது மட்டுமல்ல கடல் வளம் முருகைக் கற்கள் மீன்பிடி போன்றன பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனைஉடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதனை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்த இடத்தில் தொலைபேசி தொடர்பு கொண்டு பணிப்புரை விடுத்தார்.

மேலும் புதிய உள்ளூராட்சி சபைகளை ஏற்படுத்துவது தொடர்பாக பேச்சு இடம் பெற்றது.

குறிப்பாகபொத்துவில்வடக்கை மையமாக வைத்து ஒரு பிரதேச சபையும் சம்மாந்துறை மேற்கு தமிழ் பிரதேசங்களை மையமாக வைத்து மல்வத்தை பிரதேச சபையும் ஏற்படுந்தப்படுவதன் அவசியத்தை இடித்துரைத்தார்.

மேலும் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளைஉள்ளடக்கியதாக ஒருபுதிய வலயம் உருவாக்குவது தொடர்பாகவும் அங்கே பேசப்பட்டது.

அடுத்து தமிழர் பிரதேசங்கள் பொதுவான நிதிப்பங்கீட்டில் பாரிய புறக்கணிப்பை எதிர் நோக்கி வருகின்றது. தமிழர் பிரதேசங்களில் இணைப்பு குழு தலைவர்களாக பிறர் இருப்பதால் இந்த புறக்கணிப்பு பாரபட்ச இடம் பெறுவது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் திருக்கோவில் ஆதரவைத்தியசாலைபெயரளவில் நான்கு ஐந்து வைத்தியர்களுடன் இயங்குவதாகவும் அங்கு உண்மையில் 25 இற்கு மேற்பட்ட வைத்தியர்கள் ஆளணி தேவைப்படுவதாகவும் ஏனைய வைத்திய உபகரணங்கள் அங்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச பெரியகளப்பில்கடல்நீர்கலப்பதால் ஏற்படும் பாதிப்பு பற்றி கூறப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக இங்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை படிப்படியாக செய்வதாக ஜனாதிபதி உறுதி அளித்தார்.(05)

# இராணுவத்தினருக்கு காணி வழங்கும் பணிகளை துரிதப்படுத்த விசேட குழு

## ஜனாதிபதி நடவடிக்கை

*இராணுவவீரர்களுக்குகாணிகளைவழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.*

*ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் தலைமையில், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், இராணுவ சேவை அதிகாரசபையின் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உறுப்பினரொருவர் இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*தற்போது சேவையிலுள்ள, ஓய்வு பெற்ற, பணியின் போது உயிர் நீத்த பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர் மற்றும் இராணுவத்தினருக்கு அரச காணி வழங்கப்படவுள்ளது.*

*இராணுவ வீரர்களுக்கு காணி வழங்கும் வேலைத்திட்டம் இதற்கு முன்னர் பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அது வெற்றிகரமாகவும் துரிதமாகவும் நடைமுறைப்படுத்தப்படாமையால் இவ்விடயம் தொடர்பில் பரிசீலித்த ஜனாதிபதி மேற்படி குழுவை நியமித்துள்ளார்.*

*ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய இராணுவத்தினருக்கு காணிகளை வழங்குவது தொடர்பில் பரிசீலித்து அதற்கான பணிகளை துரிதமாக ஏற்பாடு செய்வது சம்பந்தப்பட்ட குழுவின் பொறுப்பாகும்.(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2024இல் வெளியிடப்பெற்றது